# பட்டயம்

மலர் - 06 பெப்ருவரி - 2010 இதழ் - 4

Date of Issue : 01-02-2010

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 6

Issue : 4 Price Per Copy : Rs.5.00




கர்த்தாவே! உமது வலதுகரம்
எம்மைத் தாங்குவதாக.

"I WILL UPHOLD THEE WITH THE RIGHT HAND OF MY RIGHTEOUSNESS" - ISAIAH 41/10

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

**122.** ‘உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி’ என வெளி 13/8 கூறுகிறது. இது எதைக் குறிக்கும்?

உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி இயேசு கிறிஸ்துவாகும். உலகத் தோற்ற முதல் என்றால் ஆதாமின் தோற்ற முதல் என பொருள். ஆதாம் உண்டாக்கப்பட்டு சுமார் 6000 வருடங்கள் ஆகிறது. அப்போது இயேசு மனுஷகுமாரனாக இந்த பூமியில் அவதரிக்கவில்லை. இங்கே உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி இயேசுவுக்கு சமமாக கூறப்பட்டுள்ளது.

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. இந்த பிரமாணத்தின்படி பழைய ஏற்பாட்டிலே குற்ற நிவாரண பலியாக ஆடு அடிக்கப்பட்டது. ஆதாம் ஏவாளின் பாவத்திற்காக ஏதேன் தோட்டத்திலே ஒரு ஆடு அடிக்கப்பட்டது. அந்த ஆட்டின் தோலை உடையாக ஆதாம் ஏவாளுக்குக் கொடுத்தார். ஆகவே அவர்களுக்காக ஆடு அடிக்கப்பட்டு அதன் இரத்தம் சிந்தப்பட்டது. தோட்டத்தை விட்டு அவர்கள் துரத்தப்பட்டாலும் அவர்கள் பாவங்களை மன்னிப்பதற்கு அடையாளமாகத் தான் ஆடு அடிக்கப்பட்டது. இந்த ஆட்டிற்கு ஒப்புமையாக இயேசு இருக்கிறார்.

பழைய ஏற்பாட்டிலுள்ள மக்களின் பாவத்தை மன்னிப்பதற்காக ஆடு பலி செலுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டிலே ஆண்டவராகிய இயேசு நமக்காக சிலுவையிலே அடிக்கப்பட்டார்; அவர் இரத்தத்தால் நமக்கு பாவ மன்னிப்பு கிடைக்கிறது. ஆகவே உலகத் தோற்றத்திற்கு முன்னே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி இயேசு மட்டுமே.

**123.** நம் முற்பிதாக்களின் பாவத்தை நாம் சுமக்கத்தான் வேண்டுமா? அந்த சாபங்களிலிருந்து எப்படி விடுதலை பெறுவது?

காயீன் ஆபேலை கொலை செய்தான். ஆதி 4/9 ல் என் சகோதரனாகிய ஆபேலுக்கு நான் காவலாளியா? என்று கேட்டான். அதற்கு அவர், “உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது.” ஆம், நீதிமானின் இரத்தம் அந்த மனுஷன் மரித்த பின்பும் தேவனை நோக்கிக் கூப்பிடும். யார், யாரையெல்லாம் இயேசு தம் இரத்தத்தால் கழுவி பாவங்களை மன்னித்து, பரிசுத்தப்படுத்தியிருக்கிறாரோ அவர்களே நீதிமான்கள். எபிரேயர் 14/24 ல் ஆபேலின் இரத்தம் பேசினது என வாசிக்கிறோம்.

எபிரேயர் 11/4 ல் விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியைப் பார்க்கிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் என வாசிக்கிறோம். அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான். அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். மத். 23/35 ல் பூமியின் மேல் சிந்தப்பட்ட நீதிமான்களின் இரத்தப்பழி என வாசிக்கிறோம்.

தோமா என்ற சீஷன் இந்தியாவில் வந்து இரத்த சாட்சியாக மரித்தான். இந்த இரத்தப்பழி தமிழ்நாட்டில் தான் இருக்கும். யார் கொலை செய்தார்களோ, அவர்கள் மேலும் அவர்கள் சந்ததி மேலும் தான் இருக்கும். ஒரு மந்திரவாதி எத்தனையோ பேர்களை கொலை செய்திருப்பான். அந்த இரத்தம் ஆண்டவரை நோக்கிக் கூப்பிடும். அவன் பிள்ளைகள் மனந்திரும்பாவிட்டால் அந்த இரத்தப்பழி அவர்களிடம் வரும். இந்த இரத்தப்பழி தன் மேல் வரக்கூடாது என பிலாத்து சொன்னான். ஆனால் இரத்தப்பழி தங்கள் மேல் வரட்டும் என யூதர்கள் சொன்னார்கள். அது அவர்கள் மேல் வந்தது. அவர்கள் பூமியெங்கும் சிதறிப் போனார்கள். நீதிமான்களின் இரத்தப்பழி நம் மேல் வராதபடிக்கு நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நீங்கள் நீதிமான்களாக இருக்கலாம்; ஆனால் உங்கள் மூதாதையர் நீதிமான்களை கொலை செய்திருப்பார்கள்; அவர்கள் மரித்திருப்பார்கள்; அவர்கள் சந்ததி அந்த இரத்தப்பழியை சுமந்து கொண்டிருக்கும். இதை எப்படி தீர்ப்பது?

இந்த இரத்தப்பழியையெல்லாம் ஆண்டவர் சுமந்தார் என விசுவாசிக்க வேண்டும். ஆகவே நாம் சுமக்கத் தேவையில்லை என வாயினால் அறிக்கை பண்ண வேண்டும். “என் பாவத்தினிமித்தம் பிள்ளைகளைத் தண்டியாதேயும்” என நம் பிள்ளைகளுக்காக நாம் ஜெபிக்க வேண்டும். மூதாதையர் பாவங்களை இயேசு எனக்காக சுமந்தார் என விசுவாசியுங்கள். மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார், (கலா 3/13) என்பதை நம் வாயினால் விசுவாசத்தோடே அறிக்கை பண்ண வேண்டும்.

நியாயப் பிரமாணத்தின் சாபம் யாத் 20/5 ல் கூறப்பட்டுள்ளது. இந்த நியாயப் பிரமாணத்தின் சாபத்தை இயேசு நமக்காக சாபமாகி மாற்றுகிறார். ஆகவே நாம் நம் முற்பிதாக்களின் அக்கிரமத்தை சுமக்கத் தேவையில்லை. “கர்த்தர் இன்று முத ல் என்னையும், என் பிள்ளை

களையும் ஆசீர்வதிப்பார்". என விசுவாசித்து அறிக்கை பண்ண வேண்டும்.

காயீன் ஆபேலைக் கொன்றதினால் தேவன் அவனைச் சபித்தார். இந்த பூமியில் நீ நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்; நீ சபிக்கப்பட்டிருப்பாய் என்று. காயீன் திருமணம் முடித்து குழந்தையையும் பெற்றான். அப்படியானால் அந்த சாபம் எப்படி மாறியது? காயீன் கர்த்தரிடம் திரும்பினான். என்னால் இந்த சாபத்தை சகிக்க முடியாது என்றான். ஆகவே தேவன் இந்த சாபத்தை மாற்றினார். காயீனை ஒருவனும் கொல்லாதபடிக்கு அவன் மேல் ஒரு அடையாளத்தைப் போட்டார். காயீன் மேல் கைவைப்பவனுக்கு 7 பழி சுமரும் என கிருபையின் அடையாளம் போட்டார். காயீனின் பாவம் மன்னிக்கப்பட்டு சாபங்கள் மாறியது போல நம் பாவ சாபங்களை யெல்லாம் மாற்றுவார். (ஆதி. 4/15)

**124.** பாக்கியம் என்றால் என்ன?

ஆண்டவர் கரத்திருந்து வரும் நன்மை தான் பாக்கியம்; 3 விதங்களில் நன்மைகளை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

1. மனுஷன் கரத்திருந்து
2. சாத்தானிடமிருந்து
3. கர்த்தரிடமிருந்து

ஆண்டவர் கரத்திருந்து பெறும் நன்மை தான் பாக்கியம்.

ஒரு ஆகாரத்தை உங்கள் நண்பன் சமைத்து உங்களுக்கு கொடுக்கிறான். இந்த ஆகாரத்தை நீங்கள் புசிப்பதற்கு முன் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் சொல்கிறீர்கள். கொடுத்த நண்பருக்கு நன்றி சொல்கிறீர்கள். நண்பர் கொண்டு வந்த ஆகாரத்தின் taste க்கு 50/100 மார்க்குகள் போட்டால் ஆண்டவர் அதை ஆசீர்வதிக்கும் போது அது 80/100 ஆக மாறி விடுகிறது. நன்மை மனுஷனிடமிருந்து வந்தாலும் அதை தேவன் ஆசீர்வதிக்கும் போது அது நமக்கு பாக்கியமாக மாறுகிறது. மனுஷனும், பிசாசும் சில நன்மைகளைக் கொடுத்து விடலாம்; ஆனால் பாக்கியத்தை கொடுக்க முடியாது.

பரத்திருந்து வரும் விசேஷமானது தான் பாக்கியம். எல்லா காரியத்திலும் பாக்கியம் பெற வேண்டும். ஆண்டவர் நன்மையானதை, மேன்மையானதைக் கொடுப்பார். எல்லா காரியத்திலும் ஆண்டவரே எனக்குச் சிறப்பான சுதந்தரம் தாரும் என கேளுங்கள். ஜீவன், சுகம், பெலன், ஞானம், அறிவு, புத்தி இவைகளையெல்லாம் நாம் கண்ணால்

பார்க்க முடியாது. ஆனால் நமக்கிருக்கும் சுகம், பெலன், ஞானம், அறிவு இவைகளின் அளவுகள் ஆண்டவருக்குத் தெரியும், நமக்கும் தெரியும். இவைகளைக் கூட்டித் தர தேவன் வல்லவர். ஞானத்தில் குறைவுள்ளவர்கள் தேவனிடம் கேட்க வேண்டும். தானியேலுக்கு 10 மடங்கு ஞானத்தைக் கொடுத்தவர் எனக்கும் தருவார் என விசுவாசத்தோடு கேட்க வேண்டும்.

மருத்துவர் உனக்கிருக்கும் நோய்க்கு மருந்தைத் தான் தருவார். ஆனால் சுகத்தை அவரால் உனக்குக் கொடுக்க முடியாது. தற்காக□மாக சுகத்திற்காக ஏதோ மருந்து கொடுக்கலாம்; ஆனால் எந்த நோயும் வராமல் தடுக்க மருத்துவரால் முடியாது. ஆசிரியர் பாடம் சொல்□கொடுக்கலாம்; ஆனால் ஞானத்தைக் கொடுக்க முடியாது. தாய் பிள்ளைக்கு ஆகாரத்தை ஊட்டி விடலாம்; ஆனால் பெலத்தைக் கொடுக்க முடியாது.

ஆண்டவரால் வரும் சுகம், ஆண்டவரால் வரும் பெலன்; ஆண்டவரால் வரும் ஞானம் - இந்த மூன்று பாக்கியங்களையும் தேவனிடம் கேட்க வேண்டும். அப்போது நிச்சயமாகத் தருவார்.

**125.** தானியேலும் அவன் நண்பர்களும் என்ன பாக்கியங்களைப் பெற்றிருந்தார்கள்?

இஸ்ரவேலர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; அவர்களில் விசேஷமானவர்களை நேபுகாத்நேச்சார் தெரிந்தெடுத்தான். தானியேலும் அவன் 3 நண்பர்களும் விசேஷித்த குணங்களுடையவர்களாயிருந்தார்கள். அவர்கள் மாசு இல்லாதவர்கள்; அழகானவர்கள்; சகல ஞானத்திலும் தேறினவர்கள்; அறிவில் சிறந்தவர்கள்; கல்வியில் நிபுணர்கள்; ராஜாவின் அரமனையில் சேவிக்கத்தக்க திறமையுள்ளவர்கள். இந்த 4 வாப□ரும் ராஜாவின் போஜனத்தால் தீட்டுப்படவி ல்லை.

1. ராஜாவின் போஜனத்தில் மதுபானம் இருந்தது.
2. ராஜாவின் போஜனம் பிசாசுக்கு படைக்கப்பட்டிருந்தது.

மட்டன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை; போதை வஸ்துக்களும் எங்களுக்கு வேண்டாம்; பிசாசுக்குப் படைத்ததை நாங்கள் புசிக்கமாட்டோம் என உறுதியாய் இருந்தார்கள். ஆகவே பருப்பும், காய்கறிகளும் மாத்திரம் தங்களுக்குத் தரும்படி தானியேல் பிரதானிகளின் தலைவனிடம் கேட்டுக் கொண்டான். 10 நாட்கள் சோதித்துப் பார்த்த போது அவர்கள் முகங்கள் பிறரை விட களையுள்ளதாகவும், சரீரங்கள் புஷ்டியுள்ளதாயுமிருந்தது. ராஜ

போஜனத்தைப் புசித்தவர்களைவிட இந்த நான்கு பேரும் புஷ்டியாய் இருந்தார்கள். இவர்களுக்கு தேவனுடைய பெலனும், பாக்கியமும் கிடைத்தது. சாப்பாட்டுக்கும் பாக்கியத்திற்கும் சம்பந்தம் இல்லை.

ஆண்டவரின் பாக்கியம் இருந்தால் எந்த ஆகாரம் புசித்தாலும் புஷ்டியாக, பெலனாக, சுகமாக, சௌக்கியமாக இருக்கலாம். ஆண்டவர் பாக்கியம் இல்லாவிட்டால் எந்த நல்ல ஆகாரம் புசித்தாலும் பெலன் வராது. ஆண்டவரின் பாக்கியமென்பது விசேஷமானது, அப்பத்தையும், தண்ணீரையும் ஆசீர்வதித்து, வியாதியை உன்னை விட்டு விலக்குவேன் என்பது தானே அவர் வாக்குத்தத்தம். ஆண்டவரின் பாக்கியமென்பது மனுஷ கரத்திருந்தோ, பிசாசு கரத்திருந்தோ, போஜன பெலத்தினாலோ வருவது இல்லை. இது ஆண்டவர் கரத்திருந்து வரும் மேலான நன்மையாகும்.

இந்த 4 வாபருக்கும் தேவன் சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார். தானியேலுக்கு 10 மடங்கு ஞானத்தைக் கொடுத்தார் (தானி 1/21). 100 பேர்களை ராஜா சோதித்து பார்த்தபோது மற்ற 96 பேர்களால் செய்ய முடியாததை இந்த 4 வாபரும் செய்தார்கள்.

நாமும் தேவனின் பாக்கியங்களை பெறுவோமாக.

**126.** ஆண்டவரின் பாக்கியம் பெற என்ன செய்ய வேண்டும்?

1. எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, அவன் பாக்கியவான் (சங் 32/1)

மனம்திரும்பி, ஞானஸ்நானம் பெறும் போது நம் பாவங்கள் முழுவதுமாக மன்னிக்கப்படுகிறது. இவர்கள் பாக்கியம் பெற்றவர்கள். ஞானஸ்நானத்தை பெற்ற பிறகு பழைய பாவங்களை தேவன் எண்ணாது இருப்பார். அந்த பாவங்களை மூடிப்போடுவார்; மீறுதல்களை மன்னிப்பார்.

2. கர்த்தரின் வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் (சங்1/2)

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருக்கிறாயா? காலையில் எழும்பி வேதத்தை வாசிக்கிறாயா? அல்லது செய்தித்தாளைப் படிக்கிறாயா? வேதத்தை தினமும் எவ்வளவு நேரம் வாசிக்கிறாய்? யார் அதிகமதிகமாய் வேதத்தை வாசிக்கிறார்களோ அவர்கள் அதிகமாய் பாக்கியத்தைப் பெறுவார்கள். சிலருக்கு கட்டுக்கதைகள் மேல் தான்

பிரியம். அவர்கள் பாக்கியத்தைப் பெற முடியாது. இரவும் பகலும் வேதத்தை வாசித்து, தியானிக்க வேண்டும்; தியானம் பண்ணுவதை எழுத வேண்டும். நீ குறிப்பு எழுதவில்லையென்றால் தியானிக்கவில்லை என பொருள். வசனங்களை கேளுங்கள்; வாசியுங்கள், தியானியுங்கள், எழுதி வையுங்கள். அப்போது நாளுக்கு நாள் பாக்கியம் பெருகும்.

3. ஆவியில் கபடம் இல்லாமல் இருக்கிறவன் பாக்கியவான் (சங். 32/2)

கபடம் இல்லாமை என்றால் என்ன?

பிறனுக்கு விரோதமாய் இருதயத்தில் தீங்கு நினையாமல் இருப்பது தான் கபடம் இல்லாமை. பழி வாங்குதல் கர்த்தருடையது; அவரே நியாயம் செய்கிறவர். பிறனுக்குத் தீங்கு செய்யவும் கூடாது; நினைக்கவும் கூடாது. தீங்கு செய்யாமல் இருக்கலாம்; ஆனால் இருதயத்தில் பகையும், கசப்பும் இருக்கிறபடியால் தீங்கு நினைக்கிறோம். பிறருக்கு தீங்கு நினைத்தாலே நாம் ஆண்டவரின் பாக்கியம் பெற முடியாது. ஆவியில் கபடம் இல்லாமல் இருக்க வேண்டும்; நமக்கு தீங்கு செய்பவர்களுக்கும் தீங்கு நினைக்கக் கூடாது. அப்போது தான் ஆண்டவரின் பாக்கியம் பெற முடியும். அவர் பாக்கியம் கிடைக்கும் போது மேலான ஆசீர்வாதம் கிடைக்கும். நாம் பிறருக்கு தீமை நினைக்கிறபடியால் தான் நமக்கு விடுதலை கிடைக்கவில்லை; நியாயம் கிடைக்கவில்லை. நாம் தீமை நினைக்காமல் இருக்கும் போது ஆண்டவர் தம் கரத்தை நீட்டுவார்; நமக்கு தேவனால் உயர்வு வரும்; சத்துருக்களுக்கு தாழ்வு வரும். ஆண்டவர் செம்மையாய் நியாயம் செய்வார்.

**127.** ''ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன்; இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை" - இந்த வசனத்தின் பொருள் என்ன?

1000 பேர்கள் இருந்தால் ஒரு மனிதனுக்குத் தான் தைரியம் இருக்கும். சிலரை பார்த்தால் தைரியமுள்ளவர்கள் போல இருக்கும். ஆனால் அவர்களுக்குள் தைரியம் இருக்காது. தைரியத்தை ஆண்டவரே தம் பிள்ளைகளுக்குத் தருகிறார். ஆகவே தான் பிரசங்கி சொல்கிறார். ''ஆயிரம் பேருக்குள்ளே ஒரு புருஷனைக் கண்டேன்; இவர்களெல்லாருக்குள்ளும் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை" என்று (பிரசங்கி 7/28)

இந்த ஸ்திரீ என்பது கர்த்தருடைய மணவாட்டியைக் குறிக்கும்.

வெளி 12/1 ல் சொல்லப்பட்ட ஸ்திரீ தான் மணவாட்டி, அவள் பாதங்களின் கீழ் சந்திரன் இருந்தது. அவள் சிரசிலே 12 நட்சத்திரங்களுள்ள கிரீடம் இருந்தது. இந்த ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள். அதாவது நீதியின் சூரியனாகிய இயேசுவை அணிந்திருந்த மணவாட்டியாக இருந்தாள்.

12 விதமான நட்சத்திரங்கள் மணவாட்டியிடம் ஜொலிக்க வேண்டும்.

1. அன்பு 2. சந்தோஷம் 3. சமாதானம் 4. தயவு 5. நற்குணம் 6. நீடிய பொறுமை 7. விசுவாசம் 8. சாந்தம் 9. இச்சையடக்கம் 10.ஆவியில் எளிமை 11. இருதயத்தில் சுத்தம் 12. மற்றவர்கள் துக்கத்தைக் கண்டு துயரப்படும் சுபாவம்.

கர்த்தராகிய இயேசுவை அணிந்தவள் தான் கர்த்தரின் பார்வையில் மணவாட்டி. இந்த மணவாட்டி ஸ்தானத்திற்கு நாம் வர வேண்டும். ஆகவே தான் ஆயிரம் பேருக்குள்ளே 1 புருஷனைக் கண்டேன்; இவர்களுக்குள் ஒரு ஸ்திரீயை நான் காணவில்லை என சாலமோன் கூறுகிறார். ஆண்டவருக்கேற்ற மணவாட்டிகளாக நாம் மாறும் போது அவர் வலதுகை நம்மை அணைத்துக் கொள்ளும். அவர் தம் வாயின் முத்தத்தால் நம்மை முத்தமிடுவார்; அவருக்குள் நாம் களிகூர்ந்து மகிழுவோம். (உன்னத பாட்டு 1/2; 2/6;). அவர் நேசம் நமக்குக் கிடைக்கும்; திராட்சரசத்தால் நம்மைத் தேற்றுவார்; நம்மை தம் இதயத்தின் மேல், புயத்தின் மேல் முத்திரையாக வைத்துக் கொள்வார். (உன் 2/10). அவர் இரகசிய வருகையின் போது “என் பிரியமே எழுந்து வா” என்று நம்மைப் பார்த்து சொல்லத்தக்கதாக நாம் அவருக்குப் பிரியமான மணவாட்டிகளாக மாறுவோமாக, (உன் 2/13).

**128.** தேவனுடைய பார்வையில் நீ அழகாயிருக்கிறாயா?

ஆண்டவர் பார்வையில் நாம் அழகானவர்களாயிருக்க வேண்டும். (உன் (1/5); அவர் உன் தோலையும், வெளித் தோற்றத்தையும் பார்க்க மாட்டார்; அவர் உன் இருதயத்தின் அழகைப் பார்க்கிறார். உன் இதயம் ஆண்டவர் பார்வையில் சுத்தமாகவும், வெளிச்சமாகவும் இருக்கிறதா? உள்ளே கறுப்பாக இருந்து வெளியே மினுக்கினால் என்ன பிரயோஜனம்? ஒன்றுமில்லை. தேவனுடைய பார்வையில் அழகான மணவாட்டிகளாக நாம் மாற வேண்டும். அப்போது கர்த்தர் நம் மேல் பிரியமாக இருப்பார். ஆண்டவருக்குப் பிரியமான மணவாட்டியாக நீ இருக்கிறாயா என்பதை சோதித்துப் பார்.

1. **அன்பு :** வீட்டுக்குள்ளே அன்பு இருக்கிறதா? வம்பும், சண்டையும் இருக்கிறதா? எப்போதும் எரிச்சலும், கோபமும் இருக்கிறதா? மன்னியாத சுபாவம் உன்னில் இருக்கிறதா? 'அன்பு' என்னும் ஆவியின் கனி இருக்கிறதா? பிறர் அன்பாக இல்லாவிட்டாலும் அன்பாய் இருங்கள்.

2. **சந்தோஷம் :** தாழ்வு வரும் போது சந்தோஷமாக இருக்கிறாயா? இருந்தாலும், இல்லாவிட்டாலும் சந்தோஷமாய் இருக்கிறாயா? எந்த சூழ்நிலையிலும் கர்த்தருக்குள் சந்தோஷமாய் இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும் அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர் (சங் 4/7).

3. **சமாதானம் :** பிறர் சண்டைக்கு இழுத்தாலும், சண்டை போடாமல் சமாதானமாக இருக்கிறாயா?

4. **நீடிய பொறுமை :** ஒருவருக்கொருவர் மன்னிக்கிற சுபாவம் இருந்தால், உனக்குள் நீடிய பொறுமை இருக்கிறது.

5. **தயவு :** ஒருவருக்கொருவர் இரங்குகிற சுபாவம் உன்னில் உண்டா?

6. **நற்குணம் :** நல்ல குணங்கள் உன் மூலம் வெளிப்படுகிறதா? அல்லது கெட்டகுணம் இருக்கிறதா?

7. **விசுவாசம் :** கர்த்தரிடம் விசுவாசமாய் இருக்கிறீர்களா? அல்லது அவிசுவாச வார்த்தை பேசுகிறீர்களா?

8. **சாந்தம் :** கோபிக்காத தன்மை உன்னில் உண்டா?

9. **இச்சையடக்கம் :** கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை, ஜீவனத்தின் பெருமை உன்னில் உண்டா? இச்சையடக்கம் உன்னில் உண்டா?

10. ஆவியில் எளிமை! ஆடம்பரத்தில் பிரியமாய் இருக்கிறாயா? அல்லது எளிமையில் பிரியமாய் இருக்கிறாயா?

11. மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு உனக்கு வருத்தம் வருகிறதா அல்லது சந்தோஷம் வருகிறதா?

12. இதயத்தில் சுத்தம் உண்டா?
உன் எண்ணம் சுத்தமாக உள்ளதா? அல்லது அசுத்தமாக இருக்கிறதா?

இந்த 12 விதமான அலங்காரங்களும், 12 விதமான

கிரீடங்களும் உள்ள மணவாட்டிகளாக நாம் காணப்பட வேண்டும். ஆண்டவருக்குப் பிரியமான சுபாவம் மாத்திரமல்ல, நீதி செய்கிறவர்களாக மாற வேண்டும். தேவ ராஜ்யத்திற்கேற்ற கனிகளை நாம் கொடுக்க வேண்டும். அன்றன்றுள்ள கனிகளை அன்றன்று கொடுக்க நாம் பிரயாசப்பட வேண்டும்.

**129.** 'கெட்ட குமாரன்' உவமை மூலம் நாம் என்ன சத்தியங்களை அறிந்து கொள்கிறோம்?

இளையகுமாரனுக்கு காலணி, மோதிரம், உயர்ந்த வஸ்திரம் இவ்வளவு தான் கிடைத்தது, ஆனால் மூத்த குமாரனுக்கோ தகப்பனுடைய எல்லாம் கிடைத்தது. "மகனே, நீ எப்போதும் என்னோடு இருக்கிறாய்; என்னுடையதெல்லாம் உன்னுடையது". (லூக் 15/31) என ஆண்டவர் நம்மைப் பார்த்துச் சொல்கிறார். கேட்டவுடனே கிடைக்கவில்லையே என எண்ணக்கூடாது. உங்களுக்கு எதை, எப்போது தர வேண்டும் என்பதை அவர் அறிவார். கர்த்தர் அதினதின் காலத்திலே எல்லாவற்றையும் நேர்த்தியாய் செய்வார். நாம் செய்ய வேண்டியது என்ன? எப்போதும் நாம் ஆண்டவரோடு இருக்க வேண்டும். எப்பொழுதும் ஆண்டவரோடு யார் இருக்கிறார்களோ அவர்களுக்கு அவர் தம்முடைய எல்லாவற்றிலும் பங்கு கொடுப்பார். ஆண்டவர் தம் ஆலோசனைகளை தம் ஞானத்தை, வரங்களைக் கொடுப்பார்.

மூத்த குமாரன் உலக சிநேகத்திலே விழுந்து போகவில்லை. தேவ சிநேகத்திலே நிலைத்திரு, அநேகர் தேவ சிநேகமும் வேண்டும்; உலக சிநேகமும் வேண்டும் என்று நினைக்கிறார்கள். இருவழியில் நீ நடப்பாயானால் ஒன்றையும் பெற்றுக் கொள்ள முடியாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்கிறவர்களாக அல்ல, ஒரே எஜமானாகிய இயேசுவுக்கு மட்டும் ஊழியம் செய்ய வேண்டும். உலக பொருளுக்கும், தேவனுக்கும் ஊழியம் செய்யக் கூடாது. உலக சிநேகம் வைத்துக் கொண்டு தேவனுக்கடுத்த காரியங்களில் வளர முடியாது. முழுமையாக தேவ சிநேகத்திற்குள் நீ வரும் போது, உனக்கு என்ன தேவையோ அதை அவ்வப்போது தேவன் உனக்கு பரலோகத்திருந்து தருவார்.

மூத்த குமாரனுக்கு கொழுத்த கன்றை தகப்பன் அடிக்கவில்லை. ஆனால் இளைய குமாரனுக்கு கொடுத்தவுடன் இவனுக்கு பொறாமை வந்து விட்டது. கேட்டிருந்தால் நிச்சயம் கொடுத்திருப்பார். தகப்பனுக்குரியதெல்லாம் தனக்குத் தான் என்பதை மறந்து போனான்.

ஆண்டவரோடு எப்போதும் இருக்க நாம் முன் வர வேண்டும். உலகத்திலே தேவன் உனக்கு அது, இது என பெரியவைகள் தராவிட்டாலும், நித்திய ஜீவனைத் தருவார்; நித்திய ஆசீர், நித்ய வீடு, நித்திய மேன்மை தருவார், நித்திய மணவாட்டியாய் சேர்த்துக் கொள்வார்; நித்திய பேரின்பம் தருவார். நித்தியமான ஆசீர்களை பரலோகில் தானே தருவார் என நீங்கள் நினைக்கலாம். இப்பொழுது என்ன கிடைக்கும்?

சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி குணமாக்குவார். பரிபூரண சமாதானம் தருவார். சத்தியத்தை வெளிப்படுத்துவார். மீனைக் கேட்டால் தகப்பன் பாம்பைக்கொடுக்க மாட்டார். அது போல நீ நன்மையானதைக் கேட்டால், உனக்கு நன்மையானதையே தருவார். ஆனால் எது நன்மையானதோ அதைத் தான் தருவார். நாம் நினைப்பதெல்லாம் தருவார் என நினைக்கக் கூடாது. உனக்கு எது தேவை, எந்த அளவு தேவை என்பது தேவனுக்குத் தெரியும்; தேவைக்கு மிஞ்சியும் உனக்குத் தரமாட்டார். எனக்கு நிறைய அளக்கவில்லை என நினைக்காதே. உனக்கு நான் என்ன குறைவு வைத்திருக்கிறேன் என தேவன் கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்! நீ கர்த்தரோடு எப்போதும் இருப்பாயானால், உன் தேவைகளை தைரியமாய் அவரிடம் கேள். தேவைப்படும் போது படியளந்து போஷிப்பார். நாளையத் தினத்திற்காகக் கவலைப்படாதே. கர்த்தர் பார்த்துக் கொள்வார் என விசுவாசித்து செயல்படு.

**130.** நித்திய மணவாளனாகிய இயேசு நமக்கு எப்படி இருக்கிறார்?

'என் மணவாளியே' என ஆண்டவர் நம்மை அழைக்கிறார். (உன் 4/11). நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன். நித்திய மணவாளன் நமக்கு இயேசு. நித்திய மணவாளனாக உன்னை நேசிக்கும் மணவாளனாக, ஆண்டவர் இருக்கிறார்.

காட்டு மரங்களுக்குள்ளே கிச்சி□மரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார் (உன் 2/3). காட்டில் எத்தனையோ மரங்கள் இருக்கிறது. அதில் அழகான ஒரு ஆப்பிள் மரம் இருக்கிறதென்றால் எந்த மரத்தின் கீழ் போய் உட்காருவோம்? இயேசு நமக்கு கிச்சி□மரம் போ□ருக்கிறார்; நிழலாய் நமக்கு இருக்கிறார் (சங்.91/1). கிச்சி□மரத்தின் கீழ இருக்கும் போது நிழ ல் மாத்திரமல்ல,

பழமும் கிடைக்கும், அதின் கனி நம் வாய்க்கு மதுரமாயிருக்கிறது. நற்கனி தருகிறார்; நல்ல பங்கு தருகிறார்; காட்டு மரங்களுக்குள் கிச்சிலி மரம் போல அவர் இருக்கிறார்.

அவர் சாரோனின் ரோஜாவாய், பள்ளத்தாக்குகளின் லீலி புஷ்பமாக இருக்கிறார். (உன் 2/1); அவர் விருந்து சாலைக்கு நம்மை அழைத்துக் கொண்டு போகிறார். அவர் கொடி நேசக் கொடியாகும். அவர் திராட்சரசத்தால் நம்மைத் தேற்றுவார் (உன் 2/5). கிச்சிலி பழங்களால் நம்மை ஆற்றுவார். இது அவருடைய ஆறுதலின் வசனங்களைக் குறிக்கிறது.

அவர் நம் ஆத்தும நேசராக இருக்கிறார் (உன் 1/7); தம் இருகரங்களால் நம்மை அணைத்து வைத்திருக்கிறார். அவர் அணைக்கிறபடியால் நாம் பயத்திற்கும், தீமைக்கும் தப்பிக் கொள்கிறோம். நாம் அசைக்கப்படுவதில்லை. அவர் நம் நேச கர்த்தர். அவர் நேசம் திராட்சரசத்தைப் பார்க்கிலும் இன்பமானது (உன் 1/2).

என் பிரியமே! என் ரூபவதியே! எழுந்து வா என நம்மை அழைப்பார். (உன். 2/13). அவர் வருகையிலே நம்மை அவரோடு எடுத்துக் கொள்வார். கன்மலைகளின் வெடிப்புகளில் நம்மை வைக்கிறார். நமக்கு கன்மலை இயேசு (உன் 2/14). அவர் தம் விலாவிலே நமக்கு அடைக்கலம் கொடுக்கிறார். சிகரங்களின் மறைவிடங்களிலே நம்மை வைக்கிறார். நமக்கு மறைவிடமாக அவர் இருக்கிறார்.

'உன் சத்தத்தை நான் கேட்கட்டும் என சொல்கிறார்'. (உன் 2/14). நம் ஜெப சத்தம், ஸ்தோத்திர சத்தங்களை, துதி சத்தங்களை அவர் ஆவலோடு கேட்கிறார்.

**131.** வேதத்தில் 'விருந்துசாலை' என்பது எதைக் குறிக்கும்?

'என்னை விருந்து சாலைக்கு அழைத்துக் கொண்டு போனார்' (உன்2/4). விருந்துசாலை என்பது ஆலயத்தைக் குறிக்கும். ஆலயத்திலே நம்மைக் கூட்டிக் கொண்டு வந்து தமது வார்த்தையால் விருந்து தருகிறார். ஞானமாகிய இயேசு தன் கொழுத்த ஜந்துக்களை அடித்து, திராட்சரசத்தை வார்த்து வைத்து, தன் போஜனப்பந்தியை ஆயத்தப்படுத்தி உனக்குக் கொடுக்கிறார். (நீதி 9/1-5). அவர் கொடுக்கும் அப்பத்தைப் புசித்து, அவர் வார்த்த திராட்சரசத்தைப் பானம் பண்ண ஆண்டவர் அழைக்கிறார். அவர் சமுகத்திற்கு வரும்படி நம்மை

அழைக்கிறார். அநேக கிறிஸ்தவர்கள் வீடுகளில் இருந்து கொண்டு கண்ணுக்கு விருந்து, செவிக்கு விருந்து, வயிற்றுக்கு விருந்து கொடுத்து விட்டு ஆலயத்திற்கு வருவதில்லை. ஆண்டவர் நம் ஆத்துமாவுக்கு விருந்து தருகிறார்.

ஆகாரம் புசிக்கிறோம்; இது நம் சரீரத்திற்கு விருந்து; உல்லாச பயணம் சென்று பல இயற்கைக் காட்சிகளைப் பார்க்கிறீர்கள்; இது உங்கள் கண்களுக்கு விருந்து. நல்ல அழகான பாடல்களை கேட்கிறீர்கள்; இது உங்கள் செவிக்கு விருந்து. உன் ஆத்துமாவுக்கு விருந்து தரும்படி ஆண்டவர் உன்னை அழைக்கிறார்.

அவர் வசனத்தைப் புசிக்க புசிக்க நம் சரீரத்தில் ஜீவன் உண்டு; சுகம் உண்டு; ஆரோக்கியம் கிடைக்கும் அவர் வார்த்தைகள் சரீரத்திற்கும், ஆத்துமாவிற்கும், ஆவிக்கும் விருந்தாக இருக்கிறது. ஆத்துமா பிழைக்கும் போது நித்திய ஜீவன் கிடைக்கும்; பரலோக பாக்கியம் கிடைக்கும்.

**132.** உன் 2/3 ல் 'கிச்சி மரத்தின் நிழலில் வாஞ்சையாய் உட்காருகிறேன். அதின் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது' என எழுதப்பட்டுள்ளது. இதன் விளக்கம் என்ன?

கனி என்பது வசனத்தைக் குறிக்கும். வசனத்தை வாஞ்சையாய் கேட்க வேண்டும். அப்போது அது உனக்கு மதுரமாக இருக்கும் (சங்.19/10). நீங்கள் வந்து பணமுமின்றி, விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். என ஏசா 55/1 கூறுகிறது. ஞானப்பால் வேதவசனத்தைக் குறிக்கும்:- திராட்சரசம் பரிசுத்தாவியைக் குறிக்கும். ஆலயத்திலே ஆண்டவர் நமக்கு 3 ஆகாரங்களைக் கொடுக்கிறார்.

1. ஞானப்பால் - வசனம்
2. திராட்சரசம் - பரி. ஆவி
3. அவர் இரத்தமும் சரீரமும் - இராப்போஜனப்பந்தி

இந்த மூன்றும் உன் ஆவிக்கு, ஆத்துமாவிற்கு, சரீரத்திற்கு விருந்தாக இருக்கிறது. திருவசனமாகிய ஞானப்பாலினால் ஆத்துமாவுக்கு உணவு கிடைக்கிறது. பரிசுத்தாவி யாகிய திராட்சரசம் உன் ஆவிக்கு உணவாக இருக்கிறது. இராப்போஜனம் மூலம் இயேசு தன்னையே நமக்காகக் கொடுக்கிறார்.

ஆகவே ஆலயத்திற்கு வரும் போது 3 காரியங்களுக்கு இடம் கொடுக்க வேண்டும்.

1. திருவசனத்தை கவனமாய் கேட்டு, அதற்கு செவி கொடுக்க வேண்டும்.

2. பரிசுத்தாவியை பெற்று ஆவியினால் நிறைந்து ஜெபித்து, ஆவிக்கேற்ற ஆராதனை செய்ய வேண்டும்.

3. இராப்போஜனப் பந்தியில் தவறாமல் பங்கு எடுக்க வேண்டும்.

அநேகர் அப்பமல்லாததற்காய் தங்கள் பணங்களை செலவு பண்ணுகிறார்கள். ஜீவ அப்பத்திற்காக செலவழித்தால் பலன் உண்டு. சரீரத்திற்காகவும், பெருமைக்காகவும், புகழுக்காகவும் பணத்தை செலவழிக்கிறார்கள். அநேகர் ஆராதிக்க வேண்டிய நேரத்திலே வீட்டில் இருக்கிறார்கள்; ஆகவே வீட்டில் இருக்க வேண்டிய நேரத்தில் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய நிர்பந்தம் வருகிறது.

ஆகவே விருந்துசாலையாகிய அவர் ஆலயத்தில் கடந்து வந்து அவரை ஆராதியுங்கள். அப்போது உங்கள் ஆவி, ஆத்துமா, வசனத்தால், பரி ஆவியால் திருப்தியாகும்.

**133.** நாம் ஏன் முறுமுறுக்க கூடாது?

உங்களை விட தாழ்விலுள்ளவர்களை எண்ணிப்பாருங்கள். அப்போது உங்கள் வாயிலே ஸ்தோத்திரம் வரும். அவருடைய இரக்கங்கள் நமக்கு கிடைத்துக் கொண்டேயிருக்கிறபடியால் அதை எண்ணி கர்த்தரை ஸ்தோத்தரிக்க வேண்டும். ஸ்தோத்தரிக்க ஸ்தோத்தரிக்க கிருபை பெருகும். முறுமுறுத்தால் இன்னும் கீழாகத் தான் போகணும். சாத்தானும் நம்மை விட்டுப் போக மாட்டான். நாம் எப்போது முறுமுறுக்கிறோமோ அப்போது சங்காரக்காரனுக்கு தேவன் நம்மை ஒப்புக் கொடுப்பார். I கொரி 10/10 ல் அவர்களில் சிலர் முறுமுறுத்து, சங்காரக்காரனால் அழிக்கப்பட்டார்கள். அதுபோல நீங்களும் முறுமுறுக்காதிருங்கள் என எழுதப்பட்டுள்ளது. யோபுவின் வாழ்க்கையில் பல சோதனைகள் வந்தது. ஆனால் முடிவிலே வெற்றி

கிடைத்தது. ஏன்? அவள் கர்த்தரிடம் முறுமுறுக்கவில்லை. ஆண்டவரை கசந்து கொள்ளவுமில்லை. கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று மட்டுமே சொன்னான்.

**134.** யார் ஆண்டவரை முழுமையாக நேசிப்பார்கள்?

1. கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள் என உன் 1/3 ல் வாசிக்கிறோம். கன்னியர்கள் என்பது உலக சிநேகம் இல்லாதவர்களைக் குறிக்கும். ஆண்டவரை உன்னால் முழுமையாக நேசிக்க முடியவில்லையென்றால் உனக்குள் உலக சிநேகம் இருக்கிறது என பொருள். உலக சிநேகம் இருக்கும் வரை முழுமையாக ஆண்டவரை நேசிக்க முடியாது.

2. உத்தமர்கள் உம்மை நேசிக்கிறார்கள் (உன் 1/4). நாம் உத்தமர்களாக இல்லாத கட்டத்தில் தேவனை முழுமையாக நேசிக்க முடியாது. வாழ்விலும், தாழ்விலும் ஆண்டவரை விட்டு பின்வாங்காதவன் தான் உத்தமன், வாழ்வு வந்தால் பின் செல்வேன், தாழ்வு வந்தால் பின் செல்ல மாட்டேன் என்பவன் உத்தமனல்ல. என்னை கன்னிகையாய், உத்தமனாய் மாற்றும் என ஜெபியுங்கள்.

**135.** உன்னதப்பாட்டு 3/11 ல் சொல்லப்பட்டுள்ள 'சாலமோனின் கலியாண நாள்' என்பது எதைக் குறிக்கும்?

ராஜாவாகிய சாலமோனின் கலியாண நாள் என்னும் மனமகிழ்ச்சியின் நாள் என்பது ஆண்டவராகிய இயேசு ராஜாவின் வருகையின் நாளாகும். ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் (வெளி 19/9). இந்த விருந்து மத்திய ஆகாயத்திலே நடக்கும். ஆண்டவரே மணவாளனாயிருப்பார். அவர் தலையில் கிரீடம் இருக்கும். அவருடைய தாயார் அவருக்கு சூட்டின முடியோடு இருப்பார். தாயார் என்பது சபையைக் குறிக்கும். சபையால் தேவனுக்கு புகழ்ச்சி உண்டாகும்; நாம் துதிக்கிற துதி, ஜெபிக்கிற ஜெபம், கர்த்தருக்காக பிரயாசப்படுகிறவைகள் எல்லாம் கர்த்தருக்கு கிரீடம் சூட்டுவது போன்றது. எல்லா தேவ பிள்ளைகளும் மத்திய ஆகாயத்திலே தேவனைச் சந்திப்பார்கள். அவர் நித்திய

மணவாளனாய் சிங்காசனத்தில் வீற்றிருப்பார். மன மகிழ்ச்சியின் நாளாகிய வருகையின் நாளிலே ஆண்டவரை சந்திக்க ஆயத்தமாவோம்.

## RtT¬úNÔRû] úLs®Ls

**276.** உன்னிடம் விசுவாசத்தின் ஆவி இருக்கிறதா? அல்லது அவிசுவாசத்தின் ஆவி இருக்கிறதா? II கொரி 4/13

**277.** அதிகமாக ஸ்தோத்தரித்து கிருபை பெறுகிறாயா? II கொரி 4/15.

**278.** உன் உள்ளான மனுஷன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறதா? II கொரி 4/16.

**279.** பரமவாசஸ்தலத்தைத் தரித்துக் கொள்ள உன்னில் வாஞ்சை யுண்டா? II கொரி 5/2.

**280.** புது சிருஷ்டியாக மாறியிருக்கிறாயா? அல்லது பழைய குணங்கள் இன்னும் உன்னில் உண்டா? II கொரி 5/17.

**281.** அவிசுவாசிகளோடு ஐக்கியப்பட்டிருக்கிறாயா? உன் ஐக்கியம் எப்படிப்பட்டவர்களோடு இருக்கிறது? II கொரி 6/14.

**282.** உன் மாம்சத்திலும், ஆவியிலும் தினமும் சுத்திகரிக்கப் படுகிறாயா? II கொரி 7/1.

**283.** சகல உபத்திரவங்களிலும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறாயா? II கொரி 7/4.

**284.** மனந்திரும்புகிறதற்கேதுவான துக்கம் உன்னில் உண்டா? II கொரி 7/9.

**285.** கர்த்தருக்குக் கொடுப்பதில் உதாரத்துவமாய் இருக்கிறாயா? II கொரி 8/2.

**286.** உன் திராணிக்கு மிஞ்சி கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுக்கிறாயா? II கொரி 8/3.

**287.** தர்மகாரியத்தில் பெருகியிருக்கிறாயா? II கொரி 8/7.

**288.** கர்த்தருக்காக விருப்பத்தோடு கொடுக்கிறாயா? II கொரி 8/11.

**289.** மன உற்சாகமாக கர்த்தருக்கென்று கொடுத்து அவருக்குப் பிரியமாய் இருக்கிறாயா? II கொரி 9/7.

**290.** நற்கிரியைகளில் நாளுக்கு நாள் பெருகுகிறீர்களா? II கொரி 9/8.

**291.** கிருபையில் நாளுக்கு நாள் பெருகுகிறீர்களா? II கொரி 9/8.

**292.** உன் போராயுதம் மாம்சத்துக்குரியதா? அல்லது ஆவிக்குரியதா? II கொரி 10/4.

**293.** உன் மேன்மை பாராட்டுதல் எதைப்பற்றியது? II கொரி 10/17.

**294.** உன்னை நீயே புகழுகிறாயா? II கொரி 10/18.

**295.** மற்றவர்கள் உன்னைப் புகழ வேண்டும் என விரும்புகிறாயா? II கொரி 10/18.

**296.** கர்த்தர் உன்னைக் குறித்து என்ன சொல்லுவார் என்பதை என்றைக்காவது யோசித்து பார்த்ததுண்டா? II கொரி 10/18.

**297.** பிறருக்கு பாரமாய் இருக்கிறோமா? II கொரி 11/9.

**298.** பிறர் உன்னைக் குறித்து பெரிதாக எண்ண வேண்டும் என விரும்புகிறாயா? II கொரி 12/6.

**299.** கர்த்தருடைய கிருபை ஒன்றே போதும் என நினைக்கின்றாயா? II கொரி 12/9.

**300.** உன் பலவீனத்தில் கர்த்தரின் பலம் பூரணமாய் விளங்கி உன்னை பெலப்படுத்துகிறதா? II கொரி 12/9.

(தொடரும்)

## EXLØm BÞûLÙm

1. **வட அரைகோளத்தில் பெரும்பாகத்தில் கடும் குளிர்.**

**(உ.ம.)** 1. **சிகோகோவில் பனிப்புயல்.**

2. **நெதர்லாந் ஏரி பனியில் உறைதல்.**

3. **பிரிட்டனில் வரலாறு காணா பனி.**

4. **வங்கதேசத்தில் குளிர்.**

5. **அமெரிக்க புளோரிடா மாவட்டத்தில் பழங்கள் மீது ஸ்பிரே - காரணம் பனிப்பொழிவு. கர்த்தாவே! குளிருக்குத் தப்புவியும். (சங். 147/17)**

2. **ரேவன் குட்டி விமானம் 2Kg; பேட்டரியில் இயங்கும் ELECTRIC MOTOR உடையது. 10Km வரை சென்று VIDEO எடுத்து அனுப்பும்.**

இதனைக் கொண்டு செயல்படும் தீவிரவாதங்கள் கட்டப்படுவதாக. (மத். 24/12)

3. வடகொரியா அமெரிக்காவுடன் பேச்சு வார்த்தை நடத்துவதாக; பொருளாதார தடை மாறுவதாக; அமைதி உண்டாவதாக.

4. கலிபோர்னியாவில் கடும் நிலநடுக்கம், HAITI யில் பூமியதிர்ச்சியினால் 2 லட்சம் பேர் மரித்துப் போனார்கள். கர்த்தாவே! சோதனைக் காலத்துக்குத் தப்புவியும். (வெளி. 3/10)

5. பாகிஸ்தானில் ஆப்கான் எல்லை ஒட்டிய மாகாண தீவிரவாத அமைப்புகள் பிடிபடுவதாக.

6. ஆப்கானில் உள்ள தீவிரவாத அமைப்புகள் பிடிபடுவதாக.

7. கண்ணி வெடிகளை அழிக்கும் முறைகள் வளர்வதாக.

8. ஏமனில் உள்ள தீவிரவாத முகாம்கள் பிடிபடுவதாக.

9. பிரயாணத்தில் ஓட்டுநர்கள் செல்போன் உபயோகிப்பது தடைசெய்யப்படுவதாக.

10. இந்தியா - பாகிஸ்தான் போர் மூளாதிருப்பதாக.

11. நதிநீர் பிரச்சனைகள் மூளாத்திருப்பதாக.

12. ஆஸியின் நிறவெறிகள் அடங்குவதாக.

13. ரஷ்யாவில் 479 தீவிபத்துகள் ஓரே நாளில் நடந்தது. இதன் காரணங்கள் கண்டுபிடிக்கப்படுவதாக.

14. போலி கல்லூரிகள், போலி மருத்துவமனைகள், போலி பல்கலைக்கழகங்கள் SEAL வைக்கப்படுவதாக.

15. தனித்தெலுங்கானா கொள்கை கைவிடப்படுவதாக.

16. அகதிகளாக ஏற்கும்படி ஆஸ்திரேலியா நோக்கிப் பயணித்த 250 தமிழர்களுக்கு மறுவாழ்வு கிடைப்பதாக.

17. இந்தியாவில் விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படுவதாக.

18. யானைகளைக் கொண்டு பிச்சையெடுக்கும் வழக்கங்கள் தடைபடுவதாக.

19. வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் காக்கப்படுவார்களாக.

20. மூன்றரை ஆண்டு மருத்துவப்படிப்பு முறை தடை செய்யப்படுவதாக.

# புதிய வெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**

(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

**2. WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**

(இணையதள முகவரி : **www.hosannahchurch.org)**

**3. FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா - ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வாலிபர் பகுதி - ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் - ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் - ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS (அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

---







**Dr. பிரின்ஸ்டன் ஜாய்,** M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்,** M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி,**
**பணகுடி - 627 109, தமிழ்நாடு.** ☎ : **(954637) 245273**
**WEB: www.hosannahchurch.org**